

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் பலத்த மழையால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொது மக்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை மற்றும் போச்சம்பள்ளி பகுதிகளில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வீட்டு வசதி துறை அமைச்சர் எஸ். முத்துசாமி நேரில் சென்று பார்வையிட்டார் மழையால் பாதிக்கப்பட்டு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார் உடன் மாவட்ட ஆட்சியர் கே. எம். சரயு, கிருஷ்ணகிரி மாவட்ட கண்காணிப்பு அதிகாரி ஷில்பா பிரபாகர் சதீஷ், மாவட்ட செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.ஜி சுகவனம் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

### ஆத்தூர் தொகுதியில் உள்ள அரசுப் பள்ளிகளில்

# சேதமடைந்த கட்டிடங்கள் குறித்து ஆய்வு!

### அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவு!

திண்டுக்கல், டிச.5-

ஆத்தூர் தொகுதியில் உள்ள அரசு பள்ளிகளில் சேதமடைந்த கட்டிடங்கள் கழிப்பறைகள் காம் பௌண்டு சுவர் குறித்து ஆய்வு செய்ய அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவிட்டுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி ஆத்தூர் தொகுதி பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு வழங்கியதோடு, உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்புகொண்டு நலத்திட்ட பணிகளை தொடங்க உத்தரவிட்டார். மேலும் தற்போது தொடர் மழை பெய்து வருவதால் கிராம ஊராட்சிகளில் உள்ள அரசு பள்ளிகளில் சேதமடைந்த கட்டிடங்கள் கழிப்பறைகள் மற்றும் காம்பௌண்ட் சுவர் குறித்து ஆய்வு செய்ய அதிகாரிகளுக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவிட்டார். ஆத்தூர் தொகுதி மக்கள் அரசு வேலைவாய்ப்பு சம்மந்தமாக கோரிக்கை மனுக்களை கொடுக்க வருபவர்கள் தமிழக அரசின் இருந்து அறிவிப்பு வெளியான உடன் தன்னை நேரில் சந்தித்து கோரிக்கை மனுக்களை கொடுக்கலாம் என கூறியதோடு அவசர தேவை மற்றும் பொதுமக்களுக்கு பயனளிக்ககூடிய நலத்திட்டங்கள் குறித்த மனுக்களை எப்போது வேண்டுமானாலும் தன்னை சந்தித்து கொடுக்கலாம் என கூறினார். .தங்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு வழங்கிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை ஆத்தூர் தொகுதி மக்கள் மனதார பாராட்டினார்கள். நிகழ்ச்சியின் போது மதிமுக மாவட்ட செயலாளர் செல்வராகவன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், ஆத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், திமுக நிர்வாகி அம்பை ரவி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பஞ்சம்பட்டி மருதாம்பாள்ஆல்பர்ட், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், அமைச்சரின் உதவியாளர் ஹரிஹரன், மாநகர பொருளாளர் மீடியா சரவணன், பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர்,குட்டத்து ஆவாரம்பட்டி டென்னி, மலைச்சாமி மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் கண்ணன் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் விவேகானந்தன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி ஜே. அருண், அய்யம்பாளையம் பேரூராட்சி மன்ற தலைவர் ரேகாஅய்யப்பன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன் முருகன், அகரம் பேரூராட்சி மன்றத்தலைவர் நந்தகோபால், தாடிக்கொம்பு பேரூராட்சி மன்றத்தலைவர் கவிதாசின்னத்தம்பி, ரெட்டியார்சத்திரம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ரமேஷ், மாணவரணி அமைப்பாளர் செல்வம், முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் ஹேமப்ரியா மகேந்திரன், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் கொம்பன் என்ற பாலசுப்ரமணி, காணிக் கைசாமி, திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார், அய்யம்பாளையம் பேரூராட்சி அலுவலகத்தைச் சேர்ந்த சுந்தர், பாறைப்பட்டி திமுக நிர்வாகி முருகன், அரசு ஒப்பந்தகாரர் கன்னிவாடி ரவி, டாஸ்மாக் வடிவேலு, தாடிக்கொம்பு அருள், மாமன்ற உறுப்பினர் நெல்லைசுபாஷ் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை ! வி.சுதாகர்,சொ.வேலு,மாஸ்டர் பெ.சேகர் முன்னிலை!

# சென்னை கிழக்கு மாவட்ட தொண்டரணி எழும்பூர் எல்.எட்வின் இல்ல மணவிழா வரவேற்பு !

### தயாநிதிமாறன் எம்.பி, மேயர் பிரியா,ப.தாயகம் கவி,கழக முன்னணியினர் வாழ்த்து!

சென்னை, டிச.5-



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. தொண்டரணி துணை அமைப்பாளர் எழும்பூர் எல்.எட்வின்,எ.செல்வி லிடியா ஆகியோரின் மகள் இ. ஸ்வீட்டி ஹானாவுக்கும், எழும்பூர் ஆர்.சுதீர்,எஸ். புவனேஸ்வரி ஆகியோரின் மகன் எஸ்.சஞ்சய்க்கும் திருமண வரவேற்பு விழா 11.12.2024 புதன்கிழமை மாலை 6:00 மணி அளவில் பி.கே.என்.கிட்ஸ் மோர் ஹால் ரத்தர்டன் ரோடு, வேப்பேரியில் நடைபெறுகிறது.

மணவிழா வரவேற்பிற்கு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர், இந்து சமய அறநிலைய மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர்கள் வி.சுதாகர், சொ.வேலு, மாநில தொண்டர் அணி செயலாளர் மாஸ்டர் பெ. சேகர்,மாவட்ட அவைத் தலைவர்கோ.ஏகப்பன்,பா. ஸ்ரீ ராமுலு,கே.எஸ்.எம். நாதன், பரிதி இளம் சுருதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர்,அ.நிர்மலாதேவி, வி.விஜயகுமார்,ஆர்.பாபு என்கிற சந்திரசேகர்,கே. கோகுல், டால்பின் எஸ்.ஹரி,எல்.சுந்தர்ராஜன், பாத்திமா முசாபர்,ஜெ. தேவகிருபை ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விழாவில் மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் பி.விஜய குமார், துணை அமைப்பாளர்கள் துரை வெங்கடேசன், சிட்கோ அன்வர்தீன்,எ. ஜி.எஸ். கோல்ட்ஜி, ஜிம் ஜி.ஸ்ரீதர்,எ.தேவேந்திரன்,ஜி.சிவப்பிரகாசம்,டி. சுதாகர்,எம்.துரை,ஜெ. சிவக்குமார்,எ.அந்தோணி ராஜன்,வி.பிரகாஷ்,எம். சண்முகவேலு,ஆர்.முனியமுகன்,ஆர். ராஜசேகர்,கா. ரியாஸ்முகமது,எஸ்.டி. சீனிவாசன், ஆர். பிரேம்குமார்,கே.மகேஷ், டி.சேகர்,கே.சத்யநாராயணன், எஸ்.ராஜேந்திரன், பி.ரகுபதி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

விழாவில் தயாநிதி மாறன் எம்.பி,சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ,ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ,வெற்றிஅழகன் எம்.எல்.ஏ,கே. எஸ்.ரவிச்சந்திரன்,ப.ரங்கநாதன், எல்.ரஜினி காந்த்,தமிழன் பிரசன்னா, பி.எம்.யாழினி,பி.கே. மூர்த்தி, கே.சந்துரு,சி. மகேஷ் குமார்,எஸ்.மணிமுடி,வே.உமாகாந்த்,சொ. பெருமாள்,பொறி த.இளம் பரிதி, தேவ ஜவகர்,ஜி.மகாதேவன்,புனிதவதி எத்திராசன்,இசட் ஆசாத்,கூ.பி. ஜெயின், சரிதா மகேஷ்குமார், டாக்டர் ஜி.சாந்தகுமாரி, பகுதி கழக செயலாளர்கள்: வே.வாசு,ஐ.சி. எப்.வ. முரளிதரன்,எ.நாகராசன்,எம். சாமிக்கண்ணு, செ.தமிழ்வேந்தன்,எஸ். ராஜசேகர்,எஸ்.முரளி, டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ்.

பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி,க.நந்தீஸ்வரன், எஸ்.பன்னீர் செல்வம், டி.வி. செம்மொழி, பி.ஜே.துளசிங்கம்,லயன் பி.உதய சங்கர்,ரமேஷ் என்கிற நீலகண்டன்,சாவித்திரி வீரராகவன், எம். இப்ராஹிம் கனி,டாக்டர் ஏ.பி.பூர்ணிமா உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

வழக்கறிஞர் பி.வின்சென்ட்,எம்.ராமச்சந்திரன், வழக்கறிஞர் வி.ராஜேஷ் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.




திருப்புவனத்தில் ஒன்றிய பேரூர் தி.மு.க. மற்றும் இளைஞர் அணி சார்பில் திமுக இளைஞரணி செயலாளர். தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு. சிவகங்கை மாவட்ட தி.மு.க. துணை செயலாளர் திருப்புவனம் பேரூராட்சி சேர்மன் த.சேங்கைமாறன் தலைமையில் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் வசந்தி சேங்கைமாறன் கிழக்கு ஒன்றிய செயலாளர் கடமபசாமி. பேரூர் கழக செயலாளர் நாகூர்கனி. ஆகியோர் முன்னிலையில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களு க்கு போர்வைகள். இனிப்புகளை வழங்கி கழகத்தினர்கள் கொண்டாடினார்கள். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் தேவதாஸ்.அறிவுகரசு. பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர் கவுன்சிலர் கண்ணன். பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான். மாவட்ட பிரதிநிதிகள் ராமலிங்கம்.ஈஸ்வரன். அக்னி ராஜ். விவசாய அணி துணைத் தலைவர் சேகர். அவைத் தலைவர் இளங்கோவன். துணைச் செயலாளர்கள் ராமு. மீனாட்சிசுந்தரம். மாணவரணி காளிதாஸ். பாண்டியகிருஷ்ணன். கவுன்சிலர்கள். வேல்பாண்டி. மாரிதாசன். பாலகிருஷ்ணன். சேக் முகமது. தொண்டரணி ராஜா. மீனவர் அனி அண்ணாமலை. மற்றும் கிளைக் கழக வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



நெய்வேலியில் துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்ததினத்தை முன்னிட்டு கழக மருத்துவ அணி சார்பில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமை அமைச்சர் சி.வெ.கணேசன், சபாராஜேந்திரன் எம்.எல்.ஏ ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் கழக முன்னணியினர் பங்கேற்றனர்.



மதுரை மாநகர் மாவட்டம், சோலை அழகுபுரம் பகுதி கழகம் சார்பில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு, பகுதி செயலாளர் ஆர்.அன்பழகன் ஏற்பாட்டில் ஐந்தாயிரம் பேருக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகளை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்கள் பொன் முத்துராமலிங்கம், பெ.குழந்தைவேலு, மாவட்ட அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு, தீர்மானக்குழு செயலாளர் அக்ரி கணேசன் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மா.ஜெயராமன், கே.தனச்செல்வம், மாவட்டத் துணைச் செயலாளர் மூவேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.டி.மணிமாறன், ஆறுமுகம், முத்துகணேசன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

### உதயநிதிஸ்டாலின் பிறந்தநாள் விழா

# நெய்வேலியில் துணை முதலமைச்சர், மருத்துவர் அணி சார்பில் இலவச பொது மருத்துவ முகாம்!

### அமைச்சர் சி.வெ. கணேசன் - சபா.இ ராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு

கடலூர், டிச.5-

கடலூர் மாவட்டம் நெய்வேலி சட்டமன்ற தொகுதி இந்திரா நகர் மாற்று குடியிருப்பு அரசு மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட மருத்துவ அணி புதுச்சேரி பிம்ஸ் மருத்துவமனை இணைந்து, மாபெரும் இலவச பொது மருத்துவ முகாம் நடைபெற்றது.

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா .இராஜேந்திரன், தலைமை தாங்கினார்.

பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா. பாலமுருகன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர். ஆர்.ராஜேஷ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ. கணேசன், கலந்து கொண்டு இலவச பொது மருத்துவ முகாமை தொடங்கி வைத்தார்.

முகாமில் பொதுநல மருத்துவர்கள் மற்றும் சிறப்பு மருத்துவ நிபுணர் குழுவினர் கலந்து கொண்டு பொது மக்களுக்கு உடல்பரிசோதனைகள் செய்து, இலவச மருந்து மாத்திரைகளை வழங்கினர். இந்நிகழ்சியில் ஒன்றிய கழக செயலாளர்கள் குணசேகரன், சந்தோஷ் குமார், கடலூர் மேற்கு மாவட்ட மருத்துவர் அணி தலைவர் வேல்முருகன், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர். சிவசுப்பிரமணிய பாரதி, புதுச்சேரி பீம்ஸ் மருத்துவமனை மருத்துவர் தனலட்சுமி குழுவினர், நெய்வேலி நகர செயலாளர் குருநாதன், குறிஞ்சிப்பாடி ஒன்றிய அவைத் தலைவர்

வீர. இராமச்சந்திரன், பொருளாளர் ஆனந்த ஜோதி, துணைசெயலாளர் ஏழுமலை,மாவட்ட பிரதிநிதி இராம.வெங்கடேசன், பண்ருட்டி ஒன்றிய துணை செயலாளர் சுமதி நந்தகோபால்,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ்,மாவட்ட பிரதிநிதி ரவி, மாவட்ட மருத்துவர் அணி நிர்வாகிகள் காமராஜ், செல்லையா, மாதவன், விருத்தகிரி, செந்தில் குமார், பாலச்சந்தர், குமார், கழக நிர்வாகிகள் மணி,செந்தில்குமார்,மணிகண்டன்,

சுரேஷ், நடராஜன்,மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

### மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பாக

# மாபெரும் மாநில அளவிலான பெண்கள் கபடி போட்டி பரிசுகள்!

### மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் வழங்கினார்!

மதுரை,டிச.5-

கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பாக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வி.விமல் ஏற்பாட்டில் மாபெரும் மாநில அளவிலான பெண்கள் கபடி போட்டி நடைபெற்றதில், வெற்றி பெற்ற அணிகளுக்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் ரொக்க பணம் மற்றும் பரிசு கோப்பைகள் வழங்கி பாராட்டினார்

கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மதுரை தெற்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வரும் நிலையில், மதுரை தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பாக மாவட்ட அமைப்பாளர் வி.விமல் ஏற்பாட்டில் திருமங்கலம் தொகுதி கள்ளிக்குடி தெற்கு, வடக்கு ஒன்றிய செயலாளர்கள் மதன்குமார், ராமமூர்த்தி, திருமங்கலம் தொகுதி பொறுப்பாளர் டிஸ்கோ அலாவுதீன் ஆகியோர் முன்னிலையில் மாநில அளவிலான பெண்கள் கபடி போட்டி இரண்டு நாட்கள் மின் ஒளியில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இப்போட்டிகளை மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் துவக்கி வைத்தார். பின்னர் வெற்றி பெற்ற அணிகளுக்கு ரொக்க பணம் மற்றும் பரிசு கோப்பைகளையும் வழங்கி சிறப்புரையாற்றினார்

அப்போது அவர் பேசும் போது நம் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியை மக்கள் போற்றும் வகையில் நடத்தி வருகின்றார். தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல இந்தியாவில் உள்ள மற்ற மாநிலத்தவரும் நம்மை பின்பற்றும் வகையில் எல்லோருக்கும் எல்லாம் என்ற கோட்பாட்டில் ஆட்சி செய்கின்றார். பெண்கள் பாராட்டும் வகையில் உதய சூரியனுக்கு வாக்களிக்கும் வகையில் செயலாற்றி வருகின்றார். கழக தலைவரை தொடர்ந்து அவர் வழியில் நம் இளம்தலைவர், இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு துறையில் அதிக அளவில் முக்கியத்துவம் கொடுத்து நாடே போற்றும் வகையில் வியக்கத்தக்க வகையில் பல்வேறு உலகளாவிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தி தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த்து வருகிறார். இதே போல் விளையாட்டு வீரர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றார்.

அவர் பிறந்த நாள் விழாவில் நீங்கள் விளையாடி பரிசுகள் பெற்றது எல்லோருக்கும் பெருமை, பரிசு பெறும் வாய்ப்பை இழந்தவர்கள் தொடர்ந்து வெற்றியை நோக்கி பயணிக்க வேண்டும் என்றும் வெற்றி பெற்ற அணிகளுக்கு மிகுந்த பாராட்டு என்றும் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் திருமங்கலம் சேர்மன் ரம்யா முத்துக்குமார், தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தென்பழஞ்சி சுரேஷ், ஜெகநாதன், ஜெகதீஷ், சாதிக் முகைதீன், ராஜதுரை, ஆதவன் அதியமான் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக பங்கேற்றார்கள்.



ஈரோடு தெற்கு மாவட்டம் கருக்கல் பாளையம் பகுதி கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம் தலைமையில் பகுதி கழக செயலாளர் குறிஞ்சி என்.தண்டபாணி முன்னிலையில் இளம் பேச்சாளர் திருமேனி கழக அரசின் சாதனைகளை விளக்கி பேசினார். நிகழ்வில் தலைமை கழக பேச்சாளர்கள் ஈரோடு இறைவன், பவானி கண்ணன், பகுதி செயலாளர்கள் வி.செல்வராஜ், வி.சி.நடராஜன், பொ.ராமச்சந்திரன், பகுதி கழக நிர்வாகிகள் இரா.சேகரன், துபாய் பழனிச்சாமி, ம.தண்டபாணி, மாமன்ற உறுப்பினர்கள் பாலாஜி, மேனகா நடேசன், ரமணி, வட்ட கழக செயலாளர் கே.டி.மகேஸ்வரன், ரகு, பாபு (எ) ஜாபர் சாதிக், ஜீவா, டி.காமராஜ், ப.தண்டபாணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.